[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(i) கோவையில் பஞ்சாலைகளை மூட ஆலை முதலாளிகள் முடிவு

திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 42-வது விதியின்படி, பொது ஜனமுக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தைப்பற்றி விவாதிக்க வேண்டி, பேரவையை ஒற்றிவைக்கக் கோரி ஒரு அறிவிக்கையைக் கொடுத்திருக்கிறேன்.—

> "நமது ராஜ்யத்திலுள்ள எல்லாப் பஞ்சாலைகளையும் 15 தினங்கள் மூடப்போவதாகவும், 15 தினங்களுக்குப் பிறகும் அடுத்த நடவடிக்கை என்ன என்பதைப் பற்றியும் ஆலோசிக்கப்படுமென்றும், தென்னிந்திய மில் முதலாளிகள் முடிவு செய்துள்ளதால், இதனால் பஞ்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகையால் இந்த மிக அவசர அவசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க, சபையை ஒற்றிவைக்க வேண்டுமென கோருகிறேன்."

தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்போதுள்ள நிலைமையில் ஏற்கனவே எங்கு பார்த்தாலும் கதவடைப்புகள் நடைபெற்று, அதனால் பத்தாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நேரத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய சர்க்கார் நடவடிக்கை எடுக்க முன்வந்திருக்கும் நேரத்திலே, ஏதோ மத்திய சர்க்காரை எதிர்ப்பதுபோல் பாவனை காட்டி, இந்தச் சர்க்காருக்குத் தொல்லை கொடுக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். பஞ்சாலைகளில் தேக்கம் இருக்கிறது, விற்பனையாகவில்லை என்று காரணங்களைக் காட்டித் தொல்லை தரும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இதன் காரணமாகப் பல லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலைமை ஏற்படும். அதன் காரணமாகப் பெரிய அளவில் விளைவுகள் ஏற்படும் என்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் இது சம்பந்தமாக அவசரமும், அவசியமும், முக்கியத்துவமும் வாய்ந்த இந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க இந்த சபையை ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. கே. என். குமாரசாமி, திரு. எம். பூபதி முதலியவர்களும் இதே காரணத்தையொட்டி ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆலைச் சொந்தக்காரர்கள் எடுத்த முடிவு அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஏப்ரல் 1-ம் தேதி முதல் 15 நாட்களுக்கு மில்களை மூடிவிட்டு நூல் உற்பத்தியைக் குறைக்கலாமா என்று யோசித்து வருவதாகச் செய்தி வந்திருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளாக நூல் பிரச்சினை, மற்றப் பிரச்சினைகள் எல்லாம் இருந்து வருகின்றன. நூல் விலை திடீரென்று குறைந்துவிட்டதன் காரணமாகவும் இம் மாதிரியான பிரச்சினைகள் தோன்றுகின்றன. 175 ஆலைச் சொந்தக்காரர்கள் சவுத் இண்டியன் மில் ஓனர்ஸ் அசோசியேஷன் சார்பாக ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 56,400 பேல்கள் நூல் தேக்கமுற்றிருக்கிறது. இதன் மதிப்பு $9\frac{1}{2}$ கோடி ரூபாய் பெறுமானமுள்ளது. மற்றச் செலவினங்களும் ஏற்பட்டிருக்கின்றன. 1964-ல் 4,654 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தியானது. 1966–லே 4,239 மில்லியன் மீட்டருக்குக் குறைந்து விட்டது. ஆனால் திட்டப் பிரகாரம் 4,900 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தி

மில்களுக்காக ஒதுக்கப்பட்டது, ஆகையால் இந்தத் திட்ட உற்பத்தியை மாற்றியமைக்கஅவர்கள் ஒரு திட்டம் காணவேண்டுமென்று சொல்கிருர்கள். இதுபற்றி டெக்ஸ்டைல் கமிஷனருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படாதவகையில் செய்ய வேண்டுமென்று கைத்தறி இயக்குநர் அவர்கள் வற்புறுத்தப்பட்டுள்ளார். அவர் கோவை சென்று நல்ல முடிவு எடுக்க அனுப்பப்பட்டார். அந்த வகையில் தொழிலாளர் நலன் பாதிக்கப்படாமல் எல்லா வழிவகைகளையும் காண முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதுபற்றி டெக்ஸ்டைல் கமிஷனருக்கும் மத்திய அரசுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம். இதற்காக இந்தச் சபையை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லை. இது சாதாரண நிர்வாகத்திற்குட்பட்ட விஷயம். இந்த அரசு தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளும் என்று கூறி, இந்தப் பிரச்சினையை விவாதிக்கச் சபையை ஒற்றிவைக்க வேண்டியதில்லையென்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மில்களை மூடிவிடப்போவதாக மில் அதிபர்கள் அறிவிப்புச் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கூறியபடி, மில் அதிபர்கள், மில்களை மூடுவதாக அறிவித்தாலும், அல்லது அப்படியே மில்களை மூடிவிட்டாலும் அது அவசரமும் அவசியமும் வாய்ந்த பிரச்சினையல்ல. இது சாதாரண அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட பிரச்சினை. ஆகவே, விதி 50, உள் விதி (8)-ன்படி ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ii) இந்திப் படங்கள் திரையிட இயலாமையும், படப்பிடிப்பு நிலையங்கள் பிற மாநிலங்களுக்கு மாற்றமும்

THIRU K. RAMAMOORTHI: Sir, I have given notice of the following adjournment motion :—

"That the business of this House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the shifting of the A.V.M. and other studios from Madras to places outside our State, being the outcome of the non-release of Hindi films in this State."

இந்த மாநிலத்தில் இருந்து வேறு மாநிலத்திற்கு இந்த ஸ்டுடியோக்களை மாற்றுவதன் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும். காரணம் நம்முடைய மாநிலத்தில் இந்திப் படங்களைத் திரையிட முடியாது இருக்கிற காரணத்தினால், சென்னையில் தயாரிக்கப்படுகிற இந்திப் படங்களை மகாராஷ்டிரா போன்ற பிற மாநிலங்களில் திரையிடக் கூடாது என்று எடுக்கப்படுகிற நடவடிக்கையின் விளைவாக இது எழுந்துள்ளது. இதுசம்பந்தமாகச் சென்னையிலும் இந்திப் படங்களைத் திரையிட அனுமதிப்பதுபற்றி சமீபத்தில் நடத்திய பேச்சு வார்த்தையின் முடிவு என்னவாயிற்று என்று தெரியவில்லை. இன்றைக்கு ஏறக்குறைய 15 இந்திப் படப்பிடிப்பில் வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது. எட்டாயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன, மத்திய அரசையோ அல்லது மகாராஷ்டிரா போன்ற மாநில அரசுகளையோ அணுகி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா, தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள இந்த முக்கியமான, அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை எப்படித் தீர்க்கப்படும் என்பதுபற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுக்காட்டிய பிரச்சினையைப் பற்றி இந்த அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க முனைந்திருக்கிறது இந்த நேரத்தில் இந்த அவையை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க